உதவி அமர்வு நீதிமன்றம், மேலூர்
நாள் :12.03.2026
அ.சா.2 – யோபு S/o பாலகிருஷ்ணன்
S.C. No. 303/2021:

(சாட்சி மனுவில் பேரில் திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)

குறுக்கு விசாரணை :

அ.சா.1 ஆக ஏற்கனவே சாட்சியம் அளித்துள்ள வெங்கடேசன் என்னுடைய லாரி ஓட்டுநர் என்றால் சரிதான். நள்ளிரவு 1.00 மணியளவில் எண்ணெய் சரக்குகளை வண்டியில் இருந்து காணவில்லை என்று எனக்கு தகவல் கொடுத்தார். நான் அருகில் இருக்கும் காவல்நிலையத்திற்கு சென்று புகார் பதிவு செய்யும் படி அறிவுறுத்தினேன். 28.04.2019 அன்று சம்பவம் நடந்தது. மறுநாள் புகார் கொடுக்கப்பட்டதாக தெரிவித்தார். ஒருநாள் சென்று காவலர்கள் என்னை விசாரணை செய்தார்கள் தேதி நினைவில்லை. என்னை தொலைபேசி வாயிலாக விசாரணைசெய்தார்கள் நேரடியாக நான் மேலூருக்கு வரவில்லை. காணாமல் போன எண்ணெய் டப்பா என்ன ஆயிற்று என்றால் கிடைக்கவில்லை. நடவடிக்கை நாங்கள் எடுத்தோம். அ.சா.1 என்னிடம் தகவல் சொல்லும் போது, எண்ணெய் டப்பாக்கள் காணவில்லை, தார்பாய் கிழிந்திருந்தது என்றும் யார் எடுத்தார்கள் என்று தெரியாது என்று தான் கூறினார் என்றால் சரிதான். என்னுடைய ஓட்டுநரான வெங்கடேசன் தான் எண்ணெய்டப்பாக்களை களவாடிவிட்டு, காணவில்லை என்று பொய்புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. அதற்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA

Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2026.03.12 10:19:37 +0530

Assistant Sessions Judge

Melur